*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 125/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.ராஜேந்திரன் த/பெ. கண்ணுசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.08.2026.**

துவக்க நேரம் 12.39 A.N

**4ம் எதிரி (ராஜா) ஆஜர். 1 முதல் 3 எதிரிகள்(1-ரங்கராஜ், 2-குமுதா, 3-அஜித்) ஆஜரில்லை. 1 முதல் 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கந்தசாமிபுதூரில் குடியிருந்து, பட்டறையில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்யவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது அண்ணன் செல்வராஜ் இறந்துவிட்டாரா என்றால் ஆமாம். எனது அண்ணன் வீட்டிற்கு அருகில்தான் நாங்கள் குடியிருக்கிறோமா என்றால் ஆமாம், 10 வீடுகள் தள்ளி குடியிருக்கிறோம். எனது அண்ணனின், கடைசி மகனின் பெயர் ராஜாவா என்றால் ஆமாம்.

2) எனது அண்ணனின் மகன் ராஜா, திருமணம் செய்துகொண்டாரா என்றால் ஆமாம். ராஜா, உலிபுரத்தில் உள்ள ஒரு ரங்கராஜின் பெண்ணை

திருமணம் செய்துகொண்டாரா என்றால் ஆமாம். எங்கள் ஊரில் ராஜம்மாள், ராஜாத்தியம்மாள் என்பவர்கள் வசிக்கிறார்களா என்றால் ஆமாம். கடந்த 05.06.2017 அன்று மாலை 03.30 மணிக்கு அகல்யாவின் அப்பா ரங்கராஜ், அவரது மனைவி குமுதா, அவரது மகன் அஜித் ஆகியோர்கள் TN 77 F 9776 என்ற வண்டியில் வந்து, எனது அண்ணனை அதே வண்டியில் கடத்திச்சென்று அவரை ரங்கராஜ், அவரது மகளை காட்டச்சொல்லி எனது அண்ணனின் இடதுபக்க, வலது பக்க அள்ளையில் உதைத்து, தகாத வார்த்தையால் திட்டி, பிளேடால் கழுத்தை அறுத்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாக நான், எனது போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 12.51 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.08.07 18:37:18 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 125/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-6)***

*Name / Father's Name:* ***திரு.பழநிவேல் த/பெ. பரமசிவம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.08.2026.**

துவக்க நேரம் 12.52 A.N

**4ம் எதிரி (ராஜா) ஆஜர். 1 முதல் 3 எதிரிகள்(1-ரங்கராஜ், 2-குமுதா, 3-அஜித்) ஆஜரில்லை. 1 முதல் 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கந்தசாமிபுதூரில் குடியிருந்து, ஆசாரி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான், எனது சொந்த வேலையின் காரணமாக மல்லியகரை காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபொழுது போலிசார், என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்யவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

எங்கள் ஊரைச்சேர்ந்த செல்வராஜின் மூன்றாவது மகன் ராஜா என்பவர், உலிபுரத்தில் உள்ள ஒரு ரங்கராஜின் பெண்ணை திருமணம் செய்துகொண்டதால், கடந்த 05.06.2017 அன்று மாலை 03.30 மணிக்கு அகல்யாவின் அப்பா ரங்கராஜ், அவரது மனைவி குமுதா, அவரது மகன் அஜித் ஆகியோர்கள் TN 77 F 9776 என்ற வண்டியில் வந்து, செல்வராஜியை அதே வண்டியில் கடத்திச்சென்று அவரை ரங்கராஜ், அவரது மகளை காட்டச்சொல்லி செல்வராஜின் இடதுபக்க, வலது பக்க அள்ளையில் உதைத்து, தகாத வார்த்தையால் திட்டி, பிளேடால் கழுத்தை அறுத்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாக அங்கிருந்து திரும்பி வந்த செல்வராஜ் என்னிடம் கூறினார் என்றும், அது சம்மந்தமாக மல்லியகரை போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து சம்பவயிடத்தை பார்த்து தயார் செய்த ஆவணத்தில் நான், 1 வதாக கையெழுத்து செய்தேன் என்று போலிசார் விசாணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக எதிரிகளுக்கு ஆதரவாக காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 12.59 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.08.07 18:37:27 +0530

Judicial Magistrate No.2, Attur.